ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2387/38 - 2024 ජූනි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.06

*2387/38 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

L. D. -B. 3/2021(III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 28 மற்றும் 45 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடனும் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளும் சபையின் ஒருப்பாட்டுடனும், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூன் 05.*

ஒழுங்குவிதிகள்

1. 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என இவ்வொழுங்குவிதிகள் எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்படும் ஒவ்வொரு குறிக்கோளுக்காகவும் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையானது, அவ்வட்டவணையின் நிரல் II இல் அதன் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டவாறு இருத்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய நேரம், அவ்வட்டவணையின் நிரல் III இல் அதன் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளில்-

"சட்டம்" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும் ; அத்துடன்

"அதிகாரமளிக்கப்பட்ட ஆள்" என்பது, சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஒழுங்குவிதி 2)

அட்டவணை

கட்டணங்கள்

| நிரல் I<br>குறிக்கோள் | நிரல் II<br>செலுத்தப்படற் பாலதான தொகை | நிரல் III<br>கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய நேரம் |
|---|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கான பதிவுசெய்தல் மற்றும் உரிமத்திற்கான விண்ணப்பம் ஒன்றிற்கான திருப்பிச் செலுத்தப்படற்பாலதல்லாத செயன்முறைக் கட்டணம் | ஐ. அ. டொ. 5,000 | விண்ணப்பத்தின் போது செலுத்தப்படற்பாலது. |
| 2. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் ஒன்றாகத் தகுதி பெறுவதற்காக பதிவுசெய்தல் மற்றும் உரிமத் திற்கான விண்ணப்பம் ஒன்றிற்கான திருப்பிச் செலுத்தப்படற்பாலதற்ற செயன்முறைக் கட்டணம் | ஐ. அ. டொ. 10,000 | விண்ணப்பத்தின் போது செலுத்தப்படற்பாலது. |
| 3. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் கரைகடந்த வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு பதிவுசெய்தல் மற்றும் உரிமத்திற்கான விண்ணப்பம் ஒன்றிற்கான திருப்பிச் செலுத்தப்படற்பாலதற்ற செயன்முறைக் கட்டணம் | ஐ. அ. டொ. 15,000 | விண்ணப்பத்தின் போது செலுத்தப்படற்பாலது. |
| 4. அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரின் பதிவுசெய்தல் மற்றும் உரிமம் ஒன்றினைப் புதுப்பித்தலுக்கான வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | ஐ. அ. டொ. 2,500 | காணப்படுகின்ற பதிவுசெய்தல் மற்றும் உரிமம் காலாவதியாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக செலுத்தப் படற்பாலது. |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் ஒன்றாக தகைமைபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்காக பதிவுசெய்தல் மற்றும் உரிமம் ஒன்றினைப் புதுப்பித்தலுக்கான வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | ஐ. அ. டொ. 5,000 | காணப்படுகின்ற பதிவுசெய்தல் மற்றும் உரிமம் காலாவதியாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக செலுத்தப் படற்பாலது. |
| 6. கரைகடந்த வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு அதிகார மளிக்கப்பட்ட ஆள் ஒருவருக்காக பதிவுசெய்தல் மற்றும் உரிமம் ஒன்றினைப் புதுப்பித்தலுக்கான வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | ஐ. அ. டொ. 10,000 | காணப்படுகின்ற பதிவுசெய்தல் மற்றும் உரிமம் காலாவதியாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக செலுத்தப் படற்பாலது. |
| 7. ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் விபரங்களை திருத்தம் செய்வதற்கான கட்டணம் | ஐ. அ. டொ. 100 | அத்தகைய திருத்தத்திற்கான விண்ணப் பத்தின் போது செலுத்தப்படற்பாலது. |
| 8. பதிவுச்சான்றிதழ் அல்லது உரிமத்தின் பதிவேட் டின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்றை அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வ தற்கான கட்டணம் | ஐ. அ. டொ. 100 | அத்தகைய பிரித்தெடுக்கப்பட்ட பகுதி அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிக்கான விண்ணப்பத்தின் போது செலுத்தப்படற்பாலது. |

4. 2022, செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2299/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆளைப் பதிவுசெய்தல் மற்றும் உரிமமளித்தல் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

EOG 06 - 0045

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.